**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 67/2015 P.W. 9/ L.W. 12**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. அனிதா | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 09.12.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை சிறப்பு புலனாய்வு பிரிவில் காவல் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். வழக்கு பதிவுச் செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. பிரான்சீஸ் என்பவர் தற்போது இறந்துவிட்டார். இதற்கு முன்பு 2011 ம் வருடம் வெள்ளிச்சந்தை காவல்நிலையத்தில் அவர் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது 1902.2011 ம் தேதி மாலை 08.00 மணிக்கு நிலையப் பொறுப்பிலிருக்கும் போது நாகர்கோவில் மோரீஸ், மத்தியாஸ் மருத்துவமனையிலிருந்து போண் மூலம் கிடைத்த தகவல் படி அங்கு சென்று தீவிர சிகிட்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தவரை பார்த்தபோது நினைவிழந்த நிலையில் இருந்தபடியால் அருகில் நின்ற அவரது மருமகன் கண்ணன் என்பவர் கொடுத்த வாக்குமூலத்தைப் பெற்று 23.00 மணிக்கு நிலையம் வந்து காவல்நிலையக்குற்ற எண். 42/2011, சட்டப்பிரிவுகள் 279, 337, 338 இ.த.ச 1860 ன் கீழ் வழக்கு பதிவுச் செய்துள்ளார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புகார் வாக்குமூலத்தையும், முதல் தகவல் அறிக்கையின் அசலையும் நீதிமன்றத்திற்கு அனுப்பியும்மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை விசாரணை அதிகாரியான எனது பார்வைக்கு வைத்தார்.

2. மேற்படி வழக்கு கோப்பை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 20.02.2011 தேதி காலை 09.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராமசாமி மற்றும் வேல்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 3 மற்றும் பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆகும்.** சாட்சிகளிடம் கையொப்பமும் பெற்றேன். அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன்.

3. பின்னர் சாட்சிகள்  நாகேந்திரன், புவனேந்திரன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் மருத்துவமனையில் சிகிட்சையிலிருந்தவர் 20.07.2011ம் தேதி காலை 10.30 மணிக்கு இறந்துவிட்ட தகவலைப் பெற்று ஆய்வாளர் அவர்களின் உத்தரவு படி இந்த வழக்கின் சட்டப்பிரிவினை 304 எ இ.த.ச 1860 ஆக மாற்றம் செய்து விசாரணை மேற்கொண்டேன். அதன் பின்பு ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனை சென்று அங்கு பிணவறையில் வைக்கப்பட்டிருந்த இறந்துபோன சின்னகனி உடல்மீது 11.30 மணி முதல் 13.00 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை பெற்று சாட்சிகளிடமும் கையொப்பம் பெற்றேன். **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. பின்னர் சாட்சிகள் கண்ணன், கிருஷ்ணன், நாகேந்திரன், விஜயகுமாரன், செல்வசுந்தரம், ரவீந்திரன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன். வழக்குப் பதிவுச் செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் பிரான்சீஸ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுச் செய்தேன். வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் முன் பிணையில் சென்றுவிட்டபடியால் அவரைக் கைது செய்யவில்லை. விபத்தில் இறந்துபோன நபரின் இறப்பு தன்மை அறிய தலைமை காவலர் செல்வராஜ் என்பவர்மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து சட்டம்சார்ந்த மருத்துவர் வசம் பிரேதத்தை ஒப்படைத்தேன்.

5. மேலும் விபத்தில் தொடர்புடைய TN 74.V. 301 Yamaha இருசக்கர வாகனத்தை வாகன ஆய்விற்காக மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். பின்னர் வழக்கினை மேல்விசாரணைக்காக ஆய்வாளர் ஜெயசேகரன் என்பவர் வசம் ஒப்படைத்தேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

இந்த வழக்கின் அ.சா1 கண்ணன் சம்பத்தன்றோ, மறுநாளோ எங்கள் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தாரா என்றால் இல்லை, மேற்படி நபரிடம் வாக்குமூலம் பதிவுச்செய்யப்பட்டுள்ளது, காவல்நிலையத்தில் வைத்து பதிவுச் செய்யப்படவில்லை. சம்பவ நேரமான இரவு 08.15 மணி என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம்நடந்ததாக சொல்லப்படும்இடத்திலிருந்து நாகர்கோவில் மோரீஸ்மருத்துவமனை சுமார் 10 கி.மீ தொலைவில் இருக்கும் என்றால் சுமார் 6 கி.மீ தொலைவு இருக்கும். அரை மணி நேரத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான்.

2. காயம்பட்ட நபர் மருத்துவமனையில் சிகிட்சைக்கு சேர்ந்த பிறகு தான் எங்களுக்கு தகவல் கிடைத்தது என்றால் சரிதான். நான் சம்பவயிடம் செல்லும்போது மேற்படி வாகனத்தின் உதிரி பாகங்கள் கிடைத்ததா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் எரியும் மின்கம்பம் எதுவும் காணப்படவில்லை என்றால் சரியல்ல. காணப்பட்டது. மேற்படி சங்கதியை நான்எனது பார்வை மகசரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சொல்லவில்லை. விபத்து நடைபெற்ற சாலையானது சுமார் 15 அடி அகலம் இருக்கும்.

3. விபத்து நடந்த இடத்தின் அருகிலோ, சாலையிலோ இரத்தக்கறை காணப்பட்டதா என்றால் இல்லை. சம்பவயிடத்தை எனக்கு கண்ணன் தான் அடையாளம் காட்டினார். இறந்துபோன நபர் ஓட்டி வந்த சைக்கிள் எந்த பகுதியில் சேதம் என்பதை சொல்லப்படவில்லை

என்றால் சரிதான். அது குறித்து விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன நபருக்கு சுமார் 60 வயதிருக்கும் என்றால் சரிதான். இறந்துபோன நபர் சைக்கிளில் ஏதாவது பொருட்களை ஏற்றி வந்ததாகவோ, பின்னால் யாரையும் உட்கார வைத்து வந்ததாகவோ எனது விசாரணையில் துலங்கவில்லை.

4. நான் அ.சா2 கிருஷ்ணன் என்பவரை விசாரிக்கும்போது குற்றம் சுமத்தப்பட்ட நபர் விபத்தை ஏற்படுத்திவிட்டு வாகனத்தை நிறுத்தாமல் சென்றுவிட்டார் என்று சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. பைக்கை கீழே போட்டுவிட்டு ஓடிவிட்டார் என்று சொல்லியுள்ளார். நான் சம்பவயிடம் செல்லும்போது விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் இருசக்கர வாகனமும், இறந்துபோன நபரின் சைக்கிளும் இருந்ததா என்றால் ஆம்- இருந்தது. இருசக்கர வாகனத்தை மட்டும் தான் மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தினேன். மேற்படி இருசக்கர வாகனமும், சைக்கிளும் இருந்ததாக எனது விசாரணையில் எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

5. மேற்படி இருசக்கர வாகனம் சம்பவயிடத்தில் காணப்பட்டதாக எனது பார்வை மகசரிலோ, வரைபடத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் இருசக்கர வாகனத்தின் தடயம் எதுவும் காணப்பட்டதா என்றால் சரியாக ஞாபகமில்லை. பட்டியல் சாட்சிகள் 1, 2, 3 இறந்துபோனவரின் உறவினர்கள் என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு தகவல் எத்தனை மணிக்கு கிடைத்தது என்றால் 08.40 மணிக்கு கிடைத்தது.

6. நான் சம்பவயிடமே செல்லவில்லை என்றாலும், விபத்தில் இறந்துபோன நபருக்கு இழப்பீடு பெறவேண்டி உண்மைக்கு மாறாக தயார் செய்த வாக்குமூலத்தின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபர் இருசக்கர வாகனத்தை மெதுவாகவும், கவனமாகவும் தான் ஓட்டிவந்தார் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.